* *
Registered as a News paper in Ceylon விலை சதம் 10



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 [3-4-67] இதழ் 52
பராபவ பங்குனி 20 ஜுல்ஹஜ் 22 திங்கட்கிழமை



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

# 'தாய்மொழி மூலமே போதனை இருக்க வேண்டும்'

## இந்திய கல்வி அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கை

புதுடில்லி, ஏப். 2

இந்தியாவில் பிராந்தியங்களில் உள்ள பாடசாலைகளில் தாய்மொழிமூலமே போதனை நடைபெற வேண்டுமென்று இந்திய கல்வி மந்திரி டாக்டர் சென் இன்று அலகபாத்தில் கூறினார்.

மும்மொழித் திட்டம் குழந்தைகளுக்கு பெரிய பளுவாக இருக்குமென்பதால் தாம் அதை ஆதரிக்கவில்லையென்றும் அவர் கூறினார்.

ஆங்கிலத்தை எந்த வகுப்பிலிருந்து கற்பிக்கலாம் என்று நிருபர் ஒருவர் கேட்ட பொழுது இந்த விஷயம் அந்த அந்த ராஜ்யங்களே முடிவு செய்ய வேண்டிய விஷயம் என்று அவர் பதிலளித்தார்.

தாய்மொழி மூலம் கல்வி புகட்டும் போது பிள்ளைகள் எதையும் இலகுவில் கற்றுக் கொள்ள முடியும் என்று அவர் கருத்து தெரிவித்தார்.

குஜராத் அரசாங்கத்துடன் ராஜ்ய கல்வி விஷயமாக அவர் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

## உணவு உற்பத்தியில் யாழ்.மக்களின் சிரத்தை

### அனுராதபுரம் அரசாங்க அதிபர் மகிழ்ச்சி

சுழிபுரம், ஞாயிறு

''அரசாங்கம் இப்பொழுது உணவு உற்பத்தியில்தான் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மக்கள் உணவு உற்பத்தியில் அதிக சிரத்தை காட்டி வருகிறார்கள் என்று அறிகின்றேன். இது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது. கல்லூரி மாணவ, மாணவிகளின் கட்டுப்பாடான விளையாட்டுகளைப் பார்க்கும் பொழுது அவர்களின் திறமையான வெற்றியில் நானும் கலந்து மகிழ்ச்சி பெறுகின்றேன்.'' என்று அநுராதபுரம் அரசாங்க அதிபர் திரு. மகிந்த சில்வா சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

விழாவுக்கு கல்லூரி அதிபர் திரு. வி. தம்பு தலைமை வகித்துப் பேசுகையில், மாணவர்கள் வெற்றி தோல்வி இரண்டையும் சமமாக ஏற்றுக் கொள்வதுடன் தோல்விதான் வெற்றிக்கு முதல்படி என்பதையும் வெற்றிமூலம் உன்னத இலக்கையடைய முயற்சிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### உத்தரப் பிரதேசில் எதிர்க்கட்சி அரசாங்கம்

புதுடில்லி, ஏப். 2

உத்தரபிரதேச ராஜ்யத்தில் காங்கிரஸ்கட்சி ராஜினமா செய்துவிட்டதால் எதிர்க்கட்சியான சம்யுக்த விசாக்தல்லின் தலைவர் திரு. கரன்சிங் அரசங்கம் அமைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றார்.

புதிய மந்திரிசபையில் 15 பேருக்குமேல் இருக்கமாட்டார்களென்று திரு. சிங் தெரிவித்துள்ளார்.

## பூநகரியில் ஆயுதம்தாங்கிய கைகலப்பு

### 6 பேர் ஆஸ்பத்திரியில்; 3பேர்கவலைக்கிடம்

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம், திங்கள்

பூநகரியில் நேற்றுமுன்தினமிரவு நடைபெற்ற பயங்கரச்சண்டையில் காயங்களுக்குள்ளான ஆறுபேர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூவரது நிலை மிகவும் அபாயகரமானதாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காயங்களுக்குள்ளானஆறு பேரையும்தாக்கியதாகச் சந்தேகத்தின் பேரில்பூநகரியை சேர்ந்த காசிப்பிள்ளை கிருஷ்ணசாமி, சுப்பிரமணியம் சடாட்சரம் ஆகிய இருயுவரைம் யாழ்ப்பாணம் பொலிசார் நேற்று மாலை கைதுசெய்துள்ளனர்.

காயங்களுக்குள்ளான நாகலிங்கம் நடராசா [36] சகோதரர்களான சின்னத்தம்பி செல்வரத்தினம்[28], சின்னத்தம்பி செல்வராஜா [25], சின்னத்தம்பி அம்மாக்குட்டி ]55], கிருஷ்ணசாமி வள்ளிப்பிள்ளை [24], சுப்பிரமணியம் சுந்தரமூர்த்தி [35] ஆகிய அறுவரில் நடராஜா, செல்வரத்தினம். செல்வராஜா ஆகிய மூவருமே படுமோசமான நிலையிலிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பூநகரி கந்தசுவாமிகோவிலில் நேர்த்திக்கடன் ஒன்றைச் செலுத்திவிட்டு அவரது தமையனரான நாகரத்தினம் என்பவரைத் தேடிச் சென்றபோது ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ப்து சம்பந்தப்பட்ட இரு கோஷ்டியினருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டதாகவும் இக்கைகலப்பிவ் மண்டு என்ற ஆயுதம்,புல்வெட்டும் கத்திகள் இரும்புக்கம்பிகள் பொல்லுகள் ஆகியன உபயோகிக்கப்பட்டதாகவும் பொலிசாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயங்களுக்குள்ளான சுந்தரமூர்த்தி கைதுசெய்யப்பட்டிருக்கும் சடாச்சரத்தின் சகோதரர் எனவும் மற்றொருவரான வள்ளிப்பிள்ளை மற்றச் சந்தேக நபரான கிருஷ்ணசாமியின் மனைவி எனவும் தெரியவந்துள்ளது.

இதுசம்பந்தமாக பூநகரிப் பகுதிக் காரியாதிகாரி திரு. செல்வநாயகமும் யாழ்ப்பாணம் பொலிசாரும் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

பொலிசாருக்குக்கிடைத்த இரகசியத் தகவலைத்தொடர்ந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சைநிலையத்தில்வைத்து சந்தேகநபர்களான கிருஷ்ணசாமி, சடாட்சரம் ஆகிய இருவரும் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டனர்.

## இப்படியொரு மோசடி?

### விசாரணை நடத்துமாறு இரகசியப் பொலிசாருக்குக் கோரிக்கை

சங்கானை, ஞாயிறு

சங்கானைப் பட்டினசபையில் மோசடி ஒன்று நடந்திருப்பதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து பட்டினசபைத் தலைவர் திரு எஸ். கே. திருச்சிற்றம்பலம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

1965-ம் ஆண்டு பதவியிலிருந்த பட்டினசபை நிர்வாகம் மின்சார விநியோகம் செய்வதற்கு, வீதிகளைச் சரிசெய்வதற்கு குழை வெட்டுபவர்களை நியமித்திருந்ததாம். வேலை செய்த அவர்களுக்குப் பணம் கொடுக்காமல் வேலைசெய்தவர்கள் என்று கூறி வேறு சிலருக்கு செக்காக பணம் வழங்கப் பட்டிருந்ததாம். இதுசம்பந்தமாக உண்மையாக வேலைசெய்தவர்கள் தற்போதைய பட்டின சபைத் தலைவருக்குச் செய்த புகாரைத் தொடர்ந்து பட்டினசபைத் தலைவர் விசாரணைநடத்தினர்' செக்' வழங்கப்பட்டவர்கள் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். தாம் செக்எடுத்நது உண்மையென்றும், ஆனல் வற்பு

[6-ம் பக்கம் பார்க்க]

## ஸ்ரேர்லிங் கோழிக் குஞ்சுகள்
(STERLING CHICKS)

ஸ்ரேர்லிங் ஸ்தாபனத்தார் மறுபடியும் உங்களுக்கு நேரில் தங்கள் 1 நாள், 1 மாதம் குஞ்சுகளை விநியோகம் செய்வதற்காக வந்துள்ளோம். கோழி வளர்ப்பதற்கு உங்களுக்கு ஏதாவது சந்தேகங்கள் உண்டானல் அவைகளை விபரிக்க நாங்கள்முன்வந்திருக்கிறோம். உங்கள் தேவைகளைப் பெற்றுக்கொள்ள அவர்களை

பவான் ஸ்ரோர்ஸ் 168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில்

இன்று [3-4-67] திங்கட்கிழமை தொடர்பு கொள்ளவும்.

இதன் பின்னர் உங்கள் தேவைகளுக்கு எமது யாழ்ப்பாண விநியோகஸ்தராகிய

க. மகேந்திரன், சுழாவடி, ஆனைக்கோட்டை.

என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

STERLING POULTRY PRODUCTS (Ceylon) Ltd.
145, W. A Silva Mawatha, COLOMBO 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

செல்வம் புண்ணியத்தைச் செய்யவும் அப்புண்ணியத்தால் விளையும் நல்ல இன்பத்தை அடையவும் கிடைத்தது. அதைப் பாவத்தில்செலவிடாமல் தெய்வகைங்கரியத்தில் பயன்படச்செய்வதுசிறந்தது, அழியும் செல்வத்தால் அழியாதசிவபுண்ணியத்தைத்தேடிக்கொள்வதே அறிவுக்குப் பொருத்தம் ஆகும்.

— கயிலைக் குருமணி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஊ
பங்குனி மீ 20உ (3-4-67)

## வேலைநிறுத்த படிப்பினை

வங்கி வேலைநிறுத்தம், கட்டாய மத்தியஸ்தம் மூலமின்றி சமரச பேச்சுவார்த்தைகளால் முடிந்தது பற்றி தாம் மகிழ்ச்சியடைவதாக தொழில் அமைச்சர் தெரிவிக்கின்றார். இருதரப்பினரும் கூடி, பிறர் தலையீடின்றி சமரசமாகத் தங்கள்பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வதாயின் அது நல்லதுதான். ஆனால் இரண்டு மாதகாலமாகஇங்குவங்கி வேலைநிறுத்தம் நீடித்து, நாலாயிரம் எளிய சிப்பந்திகளின் குடும்பங்களுக்குமட்டுமன்றி, வர்த்தக பொது மக்களுக்கும் நாட்டுக்கும் பெரும் கஷ்டநஷ்டங்களை ஏற்படுத்திய பின்பே ஒரு சமரசம் ஏற்பட முடிந்துள்ளது. ஆகவே இந்த முறையில் தான் தொழிலாளி-முதலாளி பிரச்னையை இனியும் தீர்க்கவேண்டியதாயின்,அதைப்பற்றி யாரும் மகிழ்ச்சியோ பெருமையோ கொள்வதற்கில்லை.

சிப்பந்திகள் கேட்ட கோரிக்கைகளில் அநேகமாக வெல்லாம், கடைசியாக வர்த்தக வங்கிகள் ஏற்றுக் கொண்டதிலிருந்து, சிப்பந்திகளின் கோரிக்கைகள் நியாயமானவையென்றுநிரூபணமாகின்றது. கோரிக்கைகள் நியாயமாக இருந்தும் அதை வர்த்தக வங்கிகள் ஏன் முதலிலேயே ஒப்புக்கொள்ளவில்லை. ஒப்புக்கொண்டிருந்தால், இவ் வேலைநிறுத்தமும் கஷ்டநஷ்டங்களும் ஏற்படாமல் தடுத்திருக்கலாம். ஆனால் வர்த்தக ஸ்தாபனங்களின்நோக்கம் குறைந்த செலவில்அதிகலாபம் பெறுவதாக இருக்கையில் சிப்பந்திகளின் நியாயமான கோரிக்கையையும் கடைசிவரை எதிர்ப்பது இயற்கை. இந்நிலையில் தங்கள் உரிமைகளை சிப்பந்திகள், வேலைநிறுத்த பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகித்துத்தான் பெற வேண்டுமா? அது இல்லாமலே, வேறுநல்ல வழிகளில் இவற்றை நியாயமாகத்தீர்க்கமுடியாதா? என்பது மிகமுக்கிய கேள்வி.

நாடு விடுதலைஅடைந்து இருபது வருடங்கள்தான் ஆகின்றன. அதன் அபிவிருத்திக்காக மக்கள் அனைவரும் கூடிய முயற்சிகளைச் சேர்ந்து செய்ய வேண்டிய சமயம் இது. வேலைநிறுத்தங்கள் மூலம் தான் தொழிலாளர்தங்களது நியாயமான உரிமைகளையும்பெற முடியுமெனில், தொட்டதற்கெல்லாம் வேலைநிறுத்தங்கள் ஏற்படவும், நாட்டு முன்னேற்றம் தடைப்பட்டுசம்பந்தப்பட்ட எல்லாருக்கும் கஷ்டநஷ்டங்கள் ஏற்படவும் செய்யும். இதனால் தொழிலாளி-முதலாளி உறவுகள் மோசமாகி மனக்கசப்புகளும் அதிகரிக்க ஏதுவாகும். இதற்கு பதில் யுத்த காலத்திலே அவசிய சேவைகளிலே எல்லாத் தகராறுகளையும் கட்டாய மத்தியஸ்த மூலம் தீர்த்துக்கொண்டதுபோல், புதிதாக விடுதலையடைந்தநாடு,பொருளாதார ஸ்திரநிலைமை அடையும்வரை வேலைநிறுத்தம், கதவடைப்பு மூலமின்றி, கட்டாய மத்தியஸ்தவழியில் தீர்த்துக்கொள்வதில் என்ன தவறு?

இன்று பலபல போட்டி தொழிற்சங்கங்கள் ஏற்பட்டு, சில அரசியல்கட்சிகளும் தங்கள் சுயநன்மைக்காகத் தொழிலாளரைப் பயன்படுத்திக்கொண்டு, வேலை நிறுத்தங்களைத் தூண்டிவிடக்கூடியதாகவுள்ளது. இதனால் தொழிலாளர் ஒற்றுமை குலைந்து, முதலாளிமார்களும் கடைசிவரை விட்டுக்கொடுக்காமல்பிடிவாதமாக இருக்கவும் வழி செய்கின்றது. பழைய வேலைநிறுத்த கஷ்ட நஷ்டங்கள் நமக்கு ஒரு பாடமாக இருந்து, இனி எல்லாத் தகராறுகளையும், வேலைநிறுத்தமின்றி சமரசமுறையில் தீர்த்துக்கொள்ள வழிவகுக்க வேண்டியதே அவசியம். இதற்கான ஏற்பாட்டை எல்லாக்கட்சித் தலைவர்களையுங் கூட்டி, தேசியஅரசாங்கம் செய்ய ஏன்முன்வரக்கூடாது? இதில் ஓரளவு வெற்றி கிடைத்தாலும் அது தேசியநன்மைக்கு உதவுவதாகும்.

## ஆலயப் பிரவேச இயக்கம்

—வதிரி ஆ. ம. செல்லத்துரை—

29-3-67 'ஈழநாடு' பத்திரிகையில் வடமாகாண அரசாங்க அதிபரால் கூட்டப்பட்ட ஆலயப்பிரவேச மகாநாட்டைப் பற்றிய செய்தியொன்றை வாசிக்க நேர்ந்தது. அங்குபரிமாறிக் கொள்ளப்பட்ட கருத்துக்களே இக்கட்டுரையை எழுதும்படி தூண்டிற்று.

காய்தல் உவத்தல் அகற்றி பெரும்பான்மைத் தமிழரும் சிறுபான்மைத் தமிழரும் இக்கட்டுரையை ஆராயவேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள்.

இப்பிரச்னையில் இற்றைக்குப் பத்து வருடங்களுக்கு முன் நடந்த சம்பவங்களை நாமின்னும் மறந்துவிடவில்லை. அப்போது சைவப் பெருமக்களுக்குஒரு வேண்டுகோள் விடுத்திருந்தோம். அதன்பயனுக உயர்திரு ஸி. குமாரசுவாமி அவர்களைத் தலைவராகவும் அன்று பெரியகோட்டு நீதிபதிகளாக இருந்த உயர்திரு ஸ்ரீஸ்கந்தராஜா, சிவஞானசுந்தரம் ஆகியோரைச் செயலாளராகவும், வடமாகாண அதிபராக இருந்த உயர்திரு ஸ்ரீகாந்தா அவர்களைப் பொருளாளராகவும் கலைப்புலவர் நவரத்தினம், ஸ்ரீ பத்மநாதன் ஓ. ஏ. உள்ளிட்ட சிலரை நிர்வாகிகளாகவும் கொண்ட ஓர் இயக்கம் உருவாக்கப்பட்டது.

இது, பத்திரிகை விளம்பரம், ஆர்ப்பாட்டம் எதுவுமின்றி இயங்கிற்று. ஆலய தர்மகர்த்தாக்களோடு மகாநாடு நடத்தினுர்கள். எந்த விதமான வாதப் பிரதிவாதங்களும் நடக்கவில்லை. 'நீங்கள் விரும்பினுல் எங்களுக்கு என்ன தடை'. இது தான் தர்மகர்த்தாக்களின் பதில். எங்களையும் அழைத்து தங்கள் இயக்கங்களின் நோக்கங்களை விளக்கினுர்கள். நாங்களடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவர்களுக்குஎனது அழுகை மூலம் நன்றிதெரிவித்தேன்.

குறித்த இயக்கத்தின் பயனுக நல்லூர்க் கந்தசுவாமி கோயில், வண்ணை வரதராஜப் பெருமாள் கோயில், வண்ணைச் சிவன்கோயில் ஆகிய சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் எவ்வித அசம்பாவிதங்களுமின்றி 8-7-56 வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டன. அந்த நிகழ்ச்சியை விமர்சித்து 17-7-56 ம் திகதி பத்திரிகையில் ''ஆலயப் பிரவேச அதிசய அனுபவம்' என்னுந் தலையங்கத்தில் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். பண்டிதர் கா. பொ இரத்தினம் வெள்ளவத்தை வைரமுத்து, இன்னும் பல சைவப் பெருமக்கள் அதனைப் பாராட்டி எழுதியிருந்தார்கள்.

அன்று நடந்த ஆலயப் பிரவேச நிகழ்ச்சிகளின் போது சிவன்கோயில் பிரார்த்தனை முடிந்தவுடன் எங்களைக் கூட்டிச்சென்ற பெருமக்களை வாழ்த்தி சைவப்புலவர் வல்லிபுரம் ஒரு வாழ்த்துப் பாடலைப் பாடினுர். அது பின்வருமாறு:

''அப்பனே சிவனே வண்ணை
அணைதரும் ஞான மூர்த்தி
வெப்பமார் வெயில் மழைக்கும்
வெளியிலே நின்ற எம்மை
ஒப்பிலா உனது கோயிற்
குட்புக அழைத்து வந்த
செப்பமார் பெரியோர் கூட்டம்
திருவுற அருள் செய்வாயே.''

எங்களை அழைத்துச் சென்ற பெரியார்களின் கண்கள் கலங்கியதைக் கண்டேன். நீதிபதி ஸ்ரீஸ்கந்தராசா, சுப்ரீம்கோட்டு நீதி அரசர் ஆனுர்.மாகாண அதிபராகஇருந்த ஸ்ரீகாந்தா உயர்ந்த சம்பளத்துடன் நிரந்தரக் காரியதரிசி ஆக்கப்பட்டார். டிஸ்திறிக் நீதிபதியாக இருந்த சிவஞானசுந்தரம் பதவி உயர்ந்த நீதிபதியாக்கப்பட்டார். ஓ. ஏ. ஆக இருந்த பத்மநாதன் மாகாண அதிபராக்கப்பட்டார். கலைப் புலவர் நவரத்தினம் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். இன்னும் பலரைப்பற்றி எழுத முடியும். விரிவஞ்சி விடுக்கின்றேன்.

இவைகளைத் தொடர்ந்து சட்டநாதர் கோயில், கயிலாயபிள்ளையார் கோயில், வில்லூன்றிப் பிள்ளையார் கோயில் ஆகியவற்றுடன் இருபத்தொரு கோயில்கள் திறக்கப்பட்டன. வில்லூன்றிமயானத்தில் நடந்த கோரக் கொலையால் மனம் வெதும்பியிருந்த எமக்கு அக்கோயில் திறப்பு உலக அதிசயங்களில் ஒன்ருகப்பட்டது. குறித்த இயக்கம் ஏனைய தொகுதிகளிலும் இரண்டொரு கோயில்களைத் திறக்கும் என எதிர்பார்த்தோம் நடைபெறவில்லை. நாங்களும் தூண்டவில்லை; அவர்களும் இயங்கவில்லை.

பத்து ஆண்டுகளுக்கு முன் ஆலயப் பிரவேசம் நடந்த போது ''ஆகமம் அழிந்து விட்டது'' ''சைவம் பாழ்பட்டு விட்டது'' என்று எவராவது எழுதவில்லை, பேசவில்லை. ''சாதி வித்தியாசம் பார்ப்பதால் மட்டுமே சைவத்தைப் பாதுகாக்கமுடியும்'' சட்டநாதன் வந்தாலும் நாம் விட்டுக்கொடுக்கமாட்டோம்'சூரன் போர்நடந்தேதீரும்'' என்ற வைராக்கிய நிலை ஏன் ஏற்பட்டது? யாரால் ஏற்பட்டது? பத்துவருடங்களுக்கு முன்னர் அன்போடு மிக இலகுவாகச் சாதித் தவர்களு [illegible] ஏன்? இதற்கு விடை காண்பதிலேதான் இரகசியம் அடங்கியிருக்கிறது. அன்று சிறுபான்மைத் தமிழராகிய நாம் ஒரு பலம் பொருந்திய தனி ஸ்தாபனத்தின் கீழ் இயங்கினேம்; வெற்றி கண்டோம். இன்று தனிப்பட்ட சிலரின் அரசியல் ஆதாயத்துக்காக நாலு ஐந்து குரல்களிற் பேசுகிறேம். எடுத்த காரியங்கள் யாவற்றிலும் படுதோல்வியடைந்து கொண்டுவருகின்றேம். மற்றச்சமயத் தவர்கள்' நாத்திகர்கள் இவர்களை இதில் புகவிட்டோம். சிறுபான்மைத் தமிழர் எல்லோரும் சேர்ந்து உழைத்தால் கூடயசீக்கிரம்பிரச்னை தீரும்.

ஆலயப்பிரவேசம் சரியா? பிழையா? என்பதை ஆராய வேண்டிய அவசியமேயில்லை. சிலவருடங்களுக்கு முன் குன்றக்குடி அடிகளார் யாழ்ப்பாணம் வந்தபோது ''ஹரிஜன ஆலயப் பிரவேசம்'', ''தமிழிலே இறைவனுக்குப் பூசை செய்தல்'' என்னும் பொருள்கள்பற்றிப் பலவிரிவுரைகள் ஆற்றினுர். அந்த விரிவுரைகளிலே திருப்திபடாத மாவட்டபுர ஆதீனத்தைச் சேர்ந்த பிராமணுேத்தமர்கள்சிலர்அடிகளோடு சம்பாஷிக்க விரும்பினுர்கள். கீரிமலை மடத்திலே ஒரு விவாத அரங்கை ஏற்படுத்தினுர் ஞர்கள். அடிகளோடு நானும், திரு. சி. க. வேலாயுதபிள்ளை, வித்துவான் ஆறுமுகம் ஆகிய நண்பர்களும் சென்றிருந்தோம். வேதாகமங்கள் படித்த பிராமண உத்தமர்கள் பலர் வந்திருந்தார்கள். பகுத்தறிவுவாதம் அங்கு இடம்பெறவில்லை. நூலறிவுவாதம்தான் நடைபெற்றது. குருக்கள்மாரின் வினுக்களுக்கெல்லாம் அடிகளார்பற்பல சுலோகங்களை எடுத்துக்காட்டிசரமாரியாக விடைகொடுத்தார். அவர்கள் உள்ளன்புடனும் நிறைந்த மனதுடனும் ஏற்றுக் கொண்டார்கள்.

நாம் சரியான முறையில் அவர்களை அணுகியிருந்தால் நிலைமை இந்த அளவுக்குச் சீர்கெட்டு இருக்காது.

''சைவசமய சமரச சங்கமும்'' கூடிய விரைவில் செயல்படப்போகிறது. சைவப்பெருமக்கள் பலத்த உதவி தருவார்களென்பது திண்ணம். ''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''.

## புற்றுநோய் நிவாரண சங்க மகாநாடு

குரும்பசிட்டி, ஞாயிறு யாழ்ப்பாண மாவட்ட புற்றுநோய் நிவாரண சங்க வருடாந்த மகாநாடு இம் மாதம் 17-ந் திகதி நடைபெறும். இவ்வருடாந்த விழாவை மானிப்பாயில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

(5-ம்கலத் தொடர்ச்சி]

ஊனய் உயிர் புகலாய் அகலிடமாய் முகில் பொழியும், வானய்வரு மதியாய் வீதி வருவானிடம் பொழியின், தேனதரித் திசைவண்டினம் மிழற்றுந் திருச்சுழியல், நானு விதம் நினைவார் தமை நலியார் நமன்தமரே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

[உடம்புகளாகியும், அவற்றில் புகுந்த உயிர்களாகியும், அகன்ற நிலமாகியும், மேகங்கள் நின்றுமழையைப் பொழியும் வானமாகியும், வினைப்பயன்வருவதற்கு வழியாகிய உள்ளமாகியும் நிற்பவனுகிய இறைவனது இடம், சோலைகளில் தேனை விரும்பி வண்டுக்கூட்டம் இசைபாடுகின்ற திருச்சுழியலாகும். அதனைப் பலவற்ருலும் நினைப்பவர்களை கூற்றுவன் ஏவலர்கள் துன்புறுத்தமாட்டார்கள்.

## ஐயாறன் எழுதுகிறது

பங்குனி மாதம் வெயில் வரவரக் கடுமையாகிறது. காலை 9 மணிக்கு மேல் மாலை 5 வரை வெப்பமும் புழுக்கமும் சகிக்கமுடியவில்லை. இன்னும் அக்கினி நாட்கள் வரவில்லை. அது வந்தால் எப்படி இருக்குமோ என்பதை நினைக்கவே மனம் கூசுகின்றது.

சமீபத்தில் கொழும்புக் சென்றிருந்தபோது, அங்கு வெப்பம் யாழ்ப்பாணத்தை விட அதிகமாக இருந்தது! அதைக் கண்டதும் ஒருவித ஆறுதல். நம்மைவிடக் கஷ்டப்படுகிறவர்களை நினைத்துக்கொண்டால் நம் மனதுக்கு உடன் ஆறுதல் கிடைக்கிறது. ஆனுல் இப்போது நுவரேலியாவை நினைத்துக் கொண்டால் மனக்குறை அதிகரிக்கும். நம் இன்பத்துக்கும் துன்பத்துக்கும் நம் மனநிலையே அதிகம் காரணமாகிறதல்லவா?

ஃ ஃ ஃ

'ஈழகேசரி' பொன்னையரின் 16வது ஞாபகதினத்தை குரும்பசிட்டி சன்மார்க்க சங்கத்தினர் சென்ற இரண்டு நாட்களாகச் சிறப்பாகக் கொண்டாடினர். அன்னதானம் செய்ததுடன் மாணவ மாணவிகளின் பேச்சுப் போட்டி, நாடகப் போட்டி இவற்றை நடத்தி தங்கப்பதக்கம் முதலிய தக்க பரிசுகளையும் வழங்கினர். மலைநாடு உள்ளிட்டு பல பகுதிகளிலிருந்து வந்த மாணவ மாணவிகள் போட்டியில் அதிகமாகக் கலந்துகொண்டது மகிழ்ச்சியளிப்பதாகும்.

மேற்பிரிவில் முதற்பரிசு பெற்ற ஒரு வாலிபர் சிரமதானத்தைப்பற்றி உணர்ச்சி ததும்பப் பேசியது, பெருமைப்படக்கூடியதாக இருந்தது. நாடகப்போட்டியிலும் பலர் கலந்துகொண்டு இங்கு நடிப்புத் திறமை எவ்வளவு உள்ளதென்பதை நிரூபித்தனர். பொன்னையரின் பெயரால் பல நல்ல காரியங்கள் அங்கு நடப்பது போற்றத்தக்கது.

ஒரே ஒரு குறை. அவரது அருமைப் பத்திரிகையான 'ஈழகேசரி' நின்றுவிட்டது, அவருக்கு மட்டுமன்றி ஈழத்துக்கே ஒரு பெரிய நஷ்டம். அரசியல் சேற்றில் காலை விடாமல் உயரிய இலக்கிய மாளிகையாகவாவதுஅப்பத்திரிகை சீக்கிரத்தில்வந்தால் தமிழ்கூறும் நல்லுலகுக்கே அந்தப் பெரும் பணியாக இருக்கும்.

ஃ ஃ ஃ

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வே. க. கந்தசாமி அவர்கள் 13 ஆண்டுகளாக நீதித்துறையில் பணியாற்றி நேற்று முன்தினம் 'ஓய்வு' அல்ல, விடுதலைபெற்ருர். நீதிவானுக இருக்கையிலேயே சமயக் கூட்டங்களிலே தமிழிலும் ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசி தொண்டாற்றி வந்தார். இனி அவர் கொழும்பிலே வழக்கறிஞராகத் தொழில் செய்யினும் அதிகமாகப் பொது, சமய சேவையில் ஈடுபடுவாரென்று தெரிகிறது. மாணவராக இருக்கையில் 'தனித்தமிழ் கந்தசாமி' என்று பெயர் பெற்ற இவர், இப்போது வேறுமொழிச் சொற்களையும் பயன்படுத்துவதால் தமிழ் வளருமென்றே கருதுகின்ருர். தமிழுக்கும் சமயத்துக்கும் இனி அதிகம் தொண்டு செய்ய முன்வந்துள்ளதுவரவேற்கத்தக்கது.

(4-ம்கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருதரப்பான சண்டை நிறுத்தத்தை அமெரிக்கா அறிவிக்கவேண்டும்

## யு தாண்ட் கோருகிறார்

நியுயோர்க், ஏப்ரல் 2

வியட்நாமில் ஒருதரப்பான சண்டை நிறுத்தத்தைப் பிரகடனம்செய்து, முதலாவது சமாதான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் தலைமைக் காரியதரிசி யுதாண்ட் அமெரிக்காவைக் கேட்டுள்ளார்.



ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் யுதாண்ட் நேற்று விடுத்த அறிக்கையொன்றில் மேற்கண்ட விபரத்தைத் தெரிவித்துள்ளார்.

''அமெரிக்கா, உலகிலேயே மிகவும் செல்வம் கொழிக்கும் நாடு. மனித சமுதாயத்துக்குப் பலவகையிலும் உதவிகள் அளிக்கும் நாடு என்பது உலகம் கண்டிருக்கிறது. இக்கட்டத்தில் சமாதானத்தின் மீது அது கொண்டிருக்கும் அக்கறையை வெளிப்படுத்தவேண்டும். வியட்னும் நெருக்கடி உலகுக்கே ஒரு சவாலாக இருக்கிறது. இதில் சம்பந்தப்பட்டவர்கள் ஒரே நேரத்தில் சமாதான முயற்சியில் இறங்குவார்களா என்பது எதிர்பார்க்கமுடியாதது. முதலில் ஒருவர் மேற்கொள்ளும் நடவடிக்கையைத் தொடர்ந்தே அடுத்த கட்டம் எப்படியாக இருக்குமென்பதை ஊகிக்க முடியும். அமெரிக்காவே முதலாவது சமாதான நடவடிக்கையை மேற்கொண்டு ஒருதரப்பான சண்டை நிறுத்தத்தை அமுல்செய்யவேண்டும்'' என்று யுதாண்ட் கோரியுள்ளார்.

ஏப்ரல் மாதம் பதினைந்தாம் திகதி இப்புதிய நடவடிக்கையை அமெரிக்கா



செயல்படுத்த முன்வரவேண்டுமென்று யுதாண்ட் விருப்பம் தெரிவித்துள்ளார்.

வியட்னும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர, ஒருதரப்பினர் நம்பிக்கையுடன் முயற்சிமேற்கொண்டால் அது நிச்சயம் பலனளிக்குமென்றும் அவர் கூறியுள்ளார்.

## லாவோஸில் 30,000 வடவியட்னும் துருப்புகள்

வியன்டைன், ஏப். 2

லாவோஸில் இந்த வருடத்தில் 118 அரசாங்கத் துருப்புக்களை வியட்காங்கியர் கொலைசெய்து விட்டதாக லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவர்ணபூமா அறிவித்துள்ளார்.

வடக்கு வியட்னும் துருப்புகள் தென் வியட்னுமுக்கு லாவோஸ் வழியாக ஊடுருவல் செய்கின்றனர் என்று கூறிய அவர், லாவோஸில் 30,000 வடக்கு வியட்னுமிய துருப்புகள் இருக்கின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

## ஹம்ப்ரி-பாப்பரசர் சந்திப்பு

லண்டன், ஏப்ரல் 2

ஐரோப்பிய சுற்று விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க உப ஜனாதிபதி ஹம்ப்ரி பாப்பரசர் போலுடன் நேற்று சுமார் முப்பது நிமிடநேரம்வரை ஆலோசனை நடத்தினர்.

வியட்னும் நெருக்கடி நிலைமை குறித்து ஆலோசிக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவித்தன.

திரு. ஹம்ப்ரி இன்று இங்கு வந்து சேர்ந்தார். நாளை பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸனுடனும் உயர் தலைவர்களுடனும் பேச்சு நடத்துவார்.

## 'முதலாவது எதிரி'

ஹாங்காங், ஏப்ரல் 2

சீன அதிபர் லியூ-ஷா-ஷிதான் சீனத் தலைவர் மா-ஸே-துங்கின் முதலாவது எதிரி என்று பீகிங் சுவரொட்டிகள் தெரிவிப்பதாக இங்கு கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

## புதிய தலைவர்

பாட்னு, ஏப்ரல் 2

உத்தரப்பிரதேசத்தில் காங்கிரஸ் மந்திரிசபை ராஜினமா செய்துகொண்டதைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகளின் புதிய கூட்டணித்தலைவராக திரு. கரன்சிங் நேற்றிரவு தெரிவுசெய்யப்பட்டார்.

## கி. பாகிஸ்தானில் உணவுநெருக்கடி

ராவல்பிண்டி, ஏப்ரல் 2

கிழக்குப் பாகிஸ்தானில் உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ளதென்றும் இந்த நிலைமையைப் போக்குவதற்கு துரிதமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்றும் பாகிஸ்தான் அதிபர் பீல்ட்மார்ஷல் அயூப்கான் நேற்று விடுத்துள்ள மாதாந்த வானொலிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தோனேஷியா

ஜாகர்த்தா, ஏப். 2

இந்தோனேஷியா முதலில் பொருளாதார ஒத்துழைப்பையே நாடும் என்று வெளிநாட்டு மந்திரி டாக்டர் அதாம்மாலிக் இங்கு தெரிவித்துள்ளார்.

அரசியல் ஒத்துழைப்பிலும் பார்க்க பொருளாதார ஒத்துழைப்பையே இந்தோனேஷியா விரும்புகிறது என்று அவர் கூறியுள்ளார்.

இன்று நடைபெறும்

## பாக்குநீரிணை நீச்சல் போட்டி

### தமிழ்நாட்டு வீரரும் கலந்துகொள்கின்றார்

இராமேஸ்வரம் ஏப். 2

நாளை திங்கட்கிழமை நடைபெறும் பாக்கு நீரிணை நீச்சல்போட்டியில், தமிழர் ஒருவர்உள்ளிட்டு எட்டுப்பேர் கலந்துகொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய நீச்சல் சம்மேளனத்தினால் இந்த நீச்சல் போட்டி நடைபெறுகிறது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் எட்டு வீரர்கள் இதில் பங்குபற்றுவார்கள். போட்டி இலங்கையிலுள்ள தலைமன்னாருக்கும் தமிழ்நாட்டிலுள்ள தனுஷ்கோடிக்குமிடையே நடைபெறும்.

நீச்சல் போட்டியில் கலந்துகொள்பவர்களில் ஏழுபேர் வடநாட்டவர்கள். மற்றவரானகாளி [26] வயது என்றதமிழர் இராமேஸ்வரத்தைச் சேர்ந்தவர்.

பத்திரிகை நிருபர் ஒருவருக்கு காளி அளித்த பேட்டியில், இராமேஸ்வரம் தீவிலுள்ள மீனவர்கள் அனைவருமே நல்ல நீச்சல் வீரர்கள் என்றும் எங்களைக் கண்டு கடலே பயப்படுமென்றும் கூறினர்.

'போட்டியில்கலந்துகொள்ளும் மற்றவர்கள இக்கடலுக்குப் புதியவர்கள். கடல் நீரோட்டம் அதிகமுள்ள இக்கடல மிகவும் ஆபத்தானது. ஆனால் நீரோட்டம் உள்ள பகுதி எதுஎன்பதும் அதிலிருந்து எப்படித் தப்புவது என்பதும் எங்களுக்கு மட்டுமே தெரியும். கடலிலேயே பிறந்து கடலிலேயே வளர்ந்தவன் நான். இக்கடலில் நான் அடிக்கடி நீண்டதூரம் வரை நீந்தியிருக்கிறேன்'' என்றார் காளி.

## காந்திஜியுடனை அனுபவங்கள்

### புதிதாகத் திரட்டப்படுகின்றன

புதுடில்லி, ஏப்ரல்2

மகாத்மா காந்திஜியுடன் நெருங்கிப் பழகியவர்களிடமிருந்து புதிய தகவல்களைத் திரட்டுவதில் இந்திய அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

இதுசம்பந்தமான வேலைகளைக் கவனிப்பதற்காககுழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

காந்திஜியுடன்நெருக்கமாகப் பழகியவர்கள் கூறும் அனுபவங்கள், கருத்துக்கள் இளம் சமுதாயத்தினருக்கு ஒரு தெம்பை ஊட்டுவதாகவிருக்கும்என்றுகுழுவின் அங்கத்தவரொருவர் தெரிவித்துள்ளார்.

குழுவின் முதல் நடவடிக்கையாக ஒரு தூதுகோஷ்டி காபூலுக்குச்சென்று கான் அப்துல்கபார்கானைச் சந்திக்கவிருக்கிறது. காந்திஜியுடன் இவர் நெருக்கமாகப்பழகியவர் என்பதால் இவர் கூறும் அனுபவங்களும் கருத்துக்களும் பெறப்படும் என்று கூறப்பட்டது.

## சுவாமி சச்சிதானந்தஜி யாழ்ப்பாண விஜயம்

யாழ்ப்பாணம், திங்.

இலங்கை திவ்ய ஜீவனசங்கங்களின் போஷகரான யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தஜீஇம்மாதம் 5-ம்திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வார். கடந்த வருடம் மேலைத் தேசங்களுக்குச் சென்று சமயப்பிரசங்கங்கள் செய்த இவர் கடந்தமாதம் இலங்கை திரும்பியிருந்தார்.

இம் மாதம் 5ந்திகதிகாலை இவர் ரயிலில் யாழ்ப்பாணம் வந்ததும் திவ்யஜீவனசங்க யாழ்ப்பாணக்கிளைப் பிரதிநிதிகளும், பல்வேறு இந்து சங்கங்களின் பிரதிநிதிகளும் இவரை வரவேற்பார்கள். 9ம் திகதிவரை இவர் யாழ்ப்பாணத்தில் கலந்துகொள்ளவிருக்கும் நிகழ்ச்சிகள் விபரம்:-

5ந்திகதி காலை 10மணிக்கு யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் வரவேற்பு. 5-ந்திகதிமாலை 6மணிக்கு திவ்ய ஜீவன சங்க யாழ்ப்பாணக் கிளையின் ஆதரவில் நல்லூர் மங்கையர்க்கரசிவித்தியாசாலையில் பொது வரவேற்பு. 6ந்திகதிகாலை 9-30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் வரவேற்பு. 7-ந்திகதி மாலை 6மணிக்கு திருநெல்வேலி அரசடி அம்மன்கோவிலில் வரவேற்பு. 8ந் திகதி

[5-ம் பக்கம் பார்க்க]

## 'கம்பன் பெயரில் ஆராய்ச்சிக்கூடம், சர்வகலாசாலை உருவாகவேண்டும்'

சென்னை, ஏப்ரல் 2

''கம்பர் காவியம், உலக மகாகாவியம். தெய்வீகத் தன்மை உள்ளது. உலகப் பொதுக் காவியம். இக்காவியத்தைப் பதினன்கு மொழிகளிலும் மொழி பெயர்ப்பு செய்யவேண்டும்'' என்று தேரழுந்தூரில் நடைபெற்ற கம்பர் விழாவில் கலந்துகொண்ட தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் யோசனை கூறியுள்ளார்.

கம்பர் புகழ், பட்டிதொட்டிகளிலும் பரவவேண்டும். கம்பன் பெயரில் ஆராய்ச்சிக் கூடங்கள், சர்வகலாசாலைகள் ஏற்படுத்தப்படவேண்டும். கம்பன்மீது வெளிநாட்டவர்களுக்கு மோகம் உண்டெனபதை நான் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தபோது கண்டுகொண்டேன்'' என்றும் அவர் கூறினர்.

இவ்விழாவுக்கு திரு. பி. ஜி. கருத்திருமன் தலைமை வகித்தார். அறநிலையத் தர்மகர்த்தா குழுத் தலைவர் டாக்டர் வரதாச்சாரியார் வரவேற்றார். விழா வைத் தொடக்கிவைத்த ஹிந்து சமயத்துறைத் துணைத் தலைவர் திரு. ஏ. மார்க்கண்டவேல் ராஜன் கம்பர் காவியம், பக்திரசம் ததும்பும் மகாகாவியம் என்றும், ராமநாம மகிமையை உணர்த்தும் பெரும் பொக்கிஷமென்றும் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இலக்கிய ரசனையை உயர்த்துவது பத்திரிகையே'

## கருத்தரங்கில் க. சி. குலரத்தினம்

யாழ்ப்பாணம், திங்கள்

''ஜனநாயக நாட்டில் பத்திரிகைகள் செய்கின்ற பணி மகத்தானது. ஒரு நாட்டின் அரசியலை ஆக்குவதும் அழிப்பதும் அதன் கையிலேயே தங்கியுள்ளது. அதுமட்டுமல்ல, மக்களின் இலக்கிய ரசனையை உயர்த்தும் காரணமாகவும் அது விளங்குகின்றது.''

யாழ் இலக்கியவட்டத்தினரின் 'இலக்கிய இரசனையை எவ்வாறு ஏற்படுத்துவது?' என்ற கருத்தரங்கில் திரு. க. சி. குலரத்தினம்பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார். யாழ்ப்பாணம் மாநகரசபை ஊழியர் பொழுதுபோக்குச் சங்க மண்டபத்தில் நடந்த இக் கருத்தரங்கு திரு. ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்றது.

எழுத்தாளர் திரு. சு. வேலுப்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:-

இன்றைய நாகரிக உலகில் செவிப்புலன் இலக்கிய உணர்வை காட்டும் கருவியாக அமைந்துள்ளது. வானொலியில் அவ்வப்போது இலக்கிய ரசனையை ஊட்டக்கூடிய விடயங்கள் ஒலிபரப்பப்படுகின்றன. ஆனால் அவற்றை தரம்படுத்தி, ஒலிபரப்புவதில் சிரத்தை எடுப்பார்களேயானால் இலக்கிய ரசனை சிறப்பறதகு இன்னும் வாய்ப்பேற்படும்.

கவிஞர் 'அம்பி' பேசுகையில், பாடசாலைகளில் இலக்கியத்தைப் பயிற்றும் ஆசிரியர்கள் பட்டதாரிகளாகவே இருக்கவேண்டுமென்ற கருத்து நிலைபெற்றிருக்கிறதென்றும் அந்த நிலையை மாற்றி இலக்கியத்தோடு ஈடுபாடுடையவர்களே இலக்கியத்தைப் பயிற்ற வேண்டுமென்றும் கூறினார்.

திரு. ஏ. ரி. பொன்னுத்துரை தமது தலைமையுரையில் கூறியதாவது:-

''மனிதன் படைத்துக்கொண்ட ஒரு நாகரிகக் கருவி, மொழி. மொழி இல்லையாயின் இன்றும் நாம் அநாகரிகத்தில் அமிழ்ந்திருப்போம். மனிதகுலத்தை உயர்த்தியபெருமை மொழிக்கே உண்டு. அத்தகைய மொழியை — மொழியின் சொற்களை — ஊடுப்பொருளாகக் கொண்டு அமைவது இலக்கியம். இதனால் தான் இலக்கியம் கலைகளில் உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. மனிதரின் உள்ளத்தை ஆள்பவர் அரசியல் வாதிகளோ அன்றி சட்ட நிபுணர்களோ என்று கூறுவதை விட இலக்கிய கர்த்தாக்களே என்று துணிந்து கூறலாம். இலக்கியத்தை நுகர்பவர்கள் தொகை எவ்வளவுக்கெவ்வளவு கூடுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்ல இலக்கியங்கள் உருவாக வழிபிறக்கும். எனவே இலக்கிய இரசனையை மக்களுக்கு ஊட்டும் பணி இலக்கிய கர்த்தாக்களையும் அதில் ஈடுபாடுடையவர்களையும் சார்ந்ததாகும். இன்று இலக்கிய ரசனை குன்றி வருகிறது. அதற்குக் காரணம் விஞ்ஞானக் கல்விக்கு முக்கியமளித்ததெனலாம். இந்நிலையில் சற்று மாற்ற மேற்பட்டதெனின் வருங்காலத்தில் உயர்ந்த இலக்கிய உதயத்துக்குஇடமிருக்காது.

# 'தமிழ் அம்மையின் பெயரில் பணி தொடரவேண்டும்'

## கல்லூரி புதுமண்டப திறப்புவிழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

'முருகக்கடவுளின் கிருபா நேர்த்திபெற்ற ஸ்தலம் நல்லூர். இந்த ஸ்தலத்தில் அமைந்துள்ள மங்கையர்க்கரசி வித்தியாசாலை ஒரு மதிப்பிற்குரிய பாடசாலையாகும். தமிழ் வளர்த்த அம்மையார் மங்கையர்க்கரசியார். அந்த அம்மையாரின் பெயருடன் ஸ்தாபிக்கப்பட்ட இப்பாடசாலையும் அதே பணியைத் தொடர்ந்து செய்வதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.'

மேற்கண்டவாறு நேற்று முன்தினம் நடைபெற்ற நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையின் புதிய மண்டபத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட வித்தியாதரிசி திரு. இ. திருநாவுக்கரசு பேசுகையில் குறிப்பிட்டார். திரு. இ. செல்வநாயசம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தற்போதுஇப்பாடசாலை குறைந்த சிறுவகுப்புகளுடனேயே நடாத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பாடசாலையில் 8-ம் வகுப்புவரை வகுப்புகளை நடாத்தவேண்டிய முயற்சிகளை நான் மேற்கொள்வதோடு, பெண்பிள்ளைகளுக்கு ஏற்ற ஒரு சிறந்த கல்வி நிலையமாக இதை மாற்ற வித்தியாதிபதியின் போதிய ஆதரவு அளிக்க என்னாலான உதவிகளைச் செய்வேன் என்பது உறுதியாகும்.''

இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவப் பகுதி விரிவுரையாளர் டாக்டர் நந்தி பேசுகையில், இக்குடாநாட்டிலேயே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட பெண் பாடசாலை இதுவேதானென்றும், அரசாங்கம் பாடசாலைகளைத் தேசியமயமாக்கிய பின்னர் இப்பாடசாலையின் பெயரை தமிழ்ப்பெண்கள் பாடசாலை என மாற்றி அமைத்தது கண்டிக்கத்தக்கதுவென்றும், இதனால் தமிழ்வளர்த்த மங்கையர்க்கரசி அம்மையாரின் பெயர் புறக்கணிக்கப் பட்டுள்ளதாகவும் இதனையிட்டு வித்தியா பகுதியினர் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் தெரிவித்தார்.

திரு. ஆ. துரைராஜசிங்கம், பாடசாலைப் பரிசோதகர் திரு. கே. பாலசிங்கம் ஆகியோரும்பேசினர். பாடசாலை மாணவிகளின் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [ந, நி.]

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், ஞாயிறு

''ஒரு கிராமத்தின் சிறப்பு அக்கிராமத்தின் இளைஞர்களின் முன்னேற்றத்தில்தங்கியுள்ளன. இளைஞர்களாகிய நாம் ஒற்றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் இயங்குவோமானால் நாம் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழலாம். கிராமத்தின் மேன்மைக்காக உழைக்க நாம் ஒன்றுபட்டு இயங்குவது மிகமிக அவசியமாகும்'' என்று சித்தங்கேணி இளைஞர் முன்னேற்றக் கழக வருடாந்தக் கூட்டத்துக்கு தலைமைவகித்துப் பேசிய ஞா. சயாரத்தினம் குறிப்பிட்டார். வருடாந்த அறிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் [illegible] ரத்தினம், உப தலைவர்: ஆ. ஆதித்தன், காரியதரிசி: சு. மகேந்திரன் உபகாரியதரிசி: ந. தவராசகுமார் தனாதிகாரி: சி. ஸ்கந்தமயம், உப தனாதிகாரி: சி. திருஅம்பலமயம். விளையாட்டுக் காரியதரிசி: [illegible] நூல்நிலையப் பொறுப்பாளர்: [illegible]

## தமிழ் காங்கிரஸ் பொதுச்சபை

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் அடுத்த மாதம் 16-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. இக்கூட்டத்தில் மேற்படி கட்சியின் எம். பி.க்கள் மூவரும் கலந்து கொள்வார்கள். இவ்வருட மத்தியில் நடைபெற விருக்கும் வருடாந்த மகாநாட்டை வவனியா அல்லது திருக்கோணமலையில் நடாத்துவது பற்றி இக்கூட்டத்தில் விசேஷமாக ஆராயப்படும். அண்மையில் நடைபெற்ற மேற்படி கட்சியின் செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி அண்மையில் காலியாகவிருக்கும் இரண்டு செனட்சபை பதவிகளை தமிழ் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த இருவருக்கும் வழங்க வேண்டுமென கோருவது பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படும். அன்று மாலை 6 மணிக்கு மேற்படி கட்சியின் பகிரங்கக் கூட்டமொன்றும் யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ந. நி)

## சட்ட நடவடிக்கை

### நிர்வாகசபை ஆலோசனை

உரும்பராய், ஞாயிறு

உரும்பராய் பறுபதபத்தினி அம்மன் ஆலயத்தில் சிறுபான்மைத் தமிழரை அண்மையில் அனுமதித்த பூசகர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுவதென ஆலய நிர்வாகசபை ஆலோசித்துள்ளதெனத் தெரிகிறது.

சிறுபான்மைத் தமிழர் ஆலயத்துள் பிரவேசிப்பதைத் தடுக்குமுகமாக கோவிலைப் பூட்டிவைக்கும்படியும், பூசை நேரங்களில் மாத்திரம் கதவைத் திறந்து பூசகரை மட்டும் உள்ளே செல்ல அனுமதிக்க வேண்டுமெனவும் நிர்வாகசபையினர் மேலும் தீர்மானித்தனர்.

## வட்டுக்கோட்டை தொகுதிக்கு இரு எம். பி. க்கள்

சுழிபுரம், ஞாயிறு

வட்டுக்கோட்டை எம்.பி திரு. அ. அமிர்தலிங்கம் வெளிநாடு சென்றிருப்பதால் அவருடைய தொகுதி வேலைகளை இரு பாராளுமன்றப் பிரதிநிதிகள் கவனித்து வருகின்றனர். உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், நல்லூர் எம். பி. டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன் ஆகிய இருவருமே அவர்களாவர். வேண்டிய தேவைகள் குறைபாடுகள் ஆகியவற்றை கவனிப்பதில் இருவரும் ஈடுபட்டுள்ளனர்.

## விடுதலை

சாவகச்சேரி, ஞாயிறு

சாவகச்சேரியில் எம். சின்னத்துரை என்பவருடைய சைக்கிளைத் திருடியதாகக் கைதுசெய்யப்பட்டு மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்டோரில் பொன்னையா சதாசிவம், வே. முத்துக்கிருஷ்ணன், ஏ. சாகுல்கமீர் ஆகிய மூவரும் மாஜிஸ்திரேட்டால் விடுதலை செய்யப்பட்டனர்.

# இடதுபக்க கன்னத்தில் காயத்துடன்இறந்துகிடந்தார்

## யோகபுரம்கொலைவழக்கில் சாட்சியம்

சாவகச்சேரி, ஞாயிறு

''சம்பவதினமிரவு நான் படுக்கையில் கிடத்தபோது இராசேந்திரம் வந்து வைத்திலிங்கம் கொலைசெய்யப்பட்டுள்ளதாகவும், முதல் எதிரி சின்னத்தம்பியும் வல்லிபுரம் சதாசிவம் ஆகியோருமே கொலைசெய்ததாகத் தெரிவித்தார். நானும் அவரும் வேறொருவருமாக டிராக்டர் ஒன்றில் சென்று ஓரிடத்தில் அதைநிற்பாட்டிவிட்டு 'ரோச்' லைற்றுடன் சம்பவ இடத்திற்குப் போனேன். அங்கு இறந்த இராமநாதி வைத்திலிங்கம் இடதுபக்கக் கன்னத்தில் காயத்துடன் இறந்துகிடந்தார். நான் கொலைசெய்யப்பட்டுள்ளதாகக் கத்திவிட்டு எனது மாமனருக்கு அறிவிக்க ஓடினேன்.''

இவ்வாறு யோகபுரம் கொலைவழக்கு முதலாவது தவணையாக சாவகச்சேரி நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்டபோது சாட்சியமளித்த செல்லத்துரை பேரம்பலம் [29 வயது] என்பவர் கூறினார்.

இவ்வழக்கில் கிளிநொச்சிப்பகுதியைச்சேர்ந்தயோகபுரம் என்னுமிடத்தில் இவ்வருடம் ஜனவரி மாதம் கணபதி சின்னத்தம்பி, கணபதி வல்லிபுரம், நாகநாதி சதாசிவம் ஆகிய மூவரும் இராமநாதர் வைத்திலிங்கத்தைக் கொலைசெய்ததாகக் கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. எதிரி சார்பில் அட்வக்கேட் கே. வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் திரு. வி. கனகசபையினது அனுசரணையுடன் ஆஜரானார். வழக்காளி தரப்பில் கிளிநொச்சிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் வழக்கை நடாத்தினார்.

எஸ். ஜெயசீலன் சாட்சியமளித்தார். மேல்விசாரணை ஏப்ரல் 11-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# தம்பி மரணம்; அண்ணன் ஆஸ்பத்திரியில் அனுமதி

## நச்சுத் திராவகம் அருந்தினர்களாம்

யாழ்ப்பாணம், திங்.

தாய் ஏசியதால் நச்சுத் திராவகம் அருந்தினராம் வாலிபர் ஒருவர். நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்ட அவர் அங்கு மரணமானார். இச்சம்பவம் நேற்று நண்பகல் வட்டுக்கோட்டையில் சித்தங்கேணி என்னுமிடத்தில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரணமான கந்தசாமி காராளசிங்கம் (19) வயது என்பவரை அவரது தாயார் ஏசியதாகவும், இதனால் மனமுடைந்த அவர் நச்சுத்திராவகப்போத்தலை எடுத்து வந்து அதற்குள்ளிருந்தமுழு நச்சுத்திராவகத்தையும் அருந்தினராம். சிறிதுநேரத்தில் குடித்த மருந்தை வாந்தி எடுத்ததோடு மயக்கமுற்றநிலையில் நிலத்தில் விழுந்தாராம். இதனைப் பார்த்த மரணமானவரின் சகோதரரான பொன்னையா [27 வயது] என்பவர் தனது தம்பியார் எடுத்த நச்சுத்திராவகம் கலந்த வாந்தியைக் கைகளால் அள்ளித் தானும்அருந்தினராம். இதனால் இவர்கள் இருவரும் உடனடியாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டார்கள். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டபோதே தம்பியான காராளசிங்கம் மரணமடைந்துவிட்டார். தமையனாரானபொன்னையா அபாயகரமானநிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுவிஷயம் சங்கானைப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

[6-ம் பக்கம் பார்க்க]

## இடமாற்றம்

சங்கானை, ஞாயிறு

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த இன்ஸ்பெக்டர் திரு. எஸ். டயஸ் இம்மாதம் முதல் சங்கானைப் பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இங்கு கடமையாற்றிய பொறுப்பதிகாரி திரு. சீ. டி. மென்டிஸ் யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஜெனரல் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்
பழைய டயர்களை புதுப்பிக்கும்
வேலைகளுக்கும்
சகலவிதமான
ரப்பர் சாமான்களுக்கும்
தொழில் நிலையங்களுக்குத் தேவையான
தற்காலிக கட்டட தளபாடங்கள்
றப்பர் பொம்மைகள்
ஆகியவற்றுக்கும்
எம்முடன்தொடர்பு கொள்ளுங்கள்
20, ஸ்ரான்லி ரேட், — யாழ்ப்பாணம்.
45, அம்பலவாணர் ரேட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7024.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி பொன்னையா

## ஞாபகார்த்த பேச்சுப்போட்டி முடிவுகள்

குரும்பசிட்டி, ஞாயிறு

ஈழகேசரி பொன்னையா ஞாபகார்த்த பேச்சுப்போட்டி இரசிகமணி கனக செந்திநாதன் தலைமையில் சனிக்கிழமைகாலை நடைபெற்றபோது மேற்பிரிவில் சரசாலை கணேச வித்தியாசாலையைச்சேர்ந்த திரு. வே பாக்கியநாதன் முதற்பரிசான தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். கீழ்ப்பிரிவு முதற் பரிசுக்குரிய தங்கப்பதக்கம் அளவெட்டி சிவநீர்க் கலைமன்றத்தைச் சேர்ந்த செல்வன் க. புராந்தகனுக்கு வழங்கப்பட்டது. குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் திரு. கு. கதிரையாண்டி பேச்சுப் போட்டியை ஆரம்பித்து வைத்தார். பேச்சுப்போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு 'ஈழநாடு' ஆசிரியர் திரு. கே. பி. ஹரன் பரிசில்களை வழங்கினர்.

திரு. ஹரன் பேசுகையில், பேச்சுப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக திகழ வாய்ப்பு ஏற்படுமென்றும், ஈழகேசரி பொன்னையா தமிழ் இலக்கிய உலகத்திற்கு செய்துதவிய பணிகளால் ஈழத்தவர்களது இலக்கியத் திறனை தமிழகத்தவரும் அறிந்து கொள்ள முடிந்தது என்று கூறினர்.

பேச்சுப்போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் பின்வருமாறு:,

மேற்பிரிபு:- வே. பாக்கியநாதன், கணேச வித்தியாசாலை சரசாலை, [தங்கப் பதக்கம்] சி. நாகேந்திரா, யூனியன் கல்லூரி தெல்லிப்பழை [வெள்ளிப்பதக்கம்] பி. தேவகராணி விக்ரோறியாக்கல்லூரி சுழிபுரம் [புத்தகங்கள்].

கீழ்ப்பிரிவு:-

திரு. க. புராந்தகன் சிவநீர்க்கலைமன்றம்அளவெட்டி [தங்கபதக்கம்] நா. சோதிநாதன் மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை [வெள்ளிப் பதக்கம்] சி. ரஞ்சன் சிவநீர்க்கலைமன்றம்அளவெட்டி [புத்தகங்கள்]. இலங்கையின் பலபாகங்களிலும் இருந்து பெருந்தொகையானோர் கலந்து கொண்ட இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் தகுதியான ஏழு பேருக்கு பாராட்டுப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற நாடகப் போட்டிக்கு திரு. ஏ. ரி. பொன்னுத்துரை தலைமை வகித்தார். வயாவிளான், ஏழாலை. யாழ்ப்பாணம். கரவெட்டி, மாதகல், பலாலி தெற்கு போன்ற இடங்களிலுள்ள நாடகமன்றங்கள் ஆறு நாடகங்களை அரங்கேற்றின,

---

## விக்டோரியாக் கல்லூரி விளையாட்டுப்போட்டி முடிவுகள்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் நீல இல்லம் 337 புள்ளிகளைப்பெற்று முதலாவது இடத்தைப் பெற்றது. பச்சையில்லம் 292 புள்ளிகளைப்பெற்று இரண்டாவது இடத்தையும், மஞ்சள் இல்லம் 274 1/2 புள்ளிகளைப் பெற்று மூன்ருவது இடத்தையும், சிவப்பு இல்லம் 254 1/2புள்ளிகளைப்பெற்று நான்காவது இடத்தையும் பெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அனுராதபுர அரசாங்க அதிபர் மகிந்த சில்வாவின் பாரியார் பரிசில்களை வழங்கினர்.


நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.
நடித்த
தெய்வத்தாய்



வெலிங்டன் [யாழ்ப்பாணம்] ராஜ் [நீர்கொழும்பு]
தினசரி பி.ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம், போயாதினம்,
விடுமுறை நாட்களில் காலை 10-30 மணிக்கு



வியப்பு திகைப்பு,
விறு விறுப்பு
அனைவரையும் மகிழ்விக்கும்
அற்புதப் படைப்பு
தாய்ப்பாசம், அன்பு
அனைத்துக்கும் ஓர் எடுத்துக்காட்டு.
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ்,
மனோரமா, கீதாஞ்சலி, பண்டரிபாய்
நடிக்கும்
அன்னை பிலிம்ஸ்
தாயின் மடியில்
2-வது வெற்றி வாரம்
கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [கொம்பனித்தெரு]
விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ண [திருமலை]
மற்றும் பல திரைகளில்
இருவல்லவர்கள்


## விவேகானந்தா வெற்றி

குரும்பசிட்டி, ஞாயிறு

ஊரங்குணை விவேகானந்தா விளையாட்டுக்கழகத்திற்கும் குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான கிரிக்கெட் ஆட்டத்தில் விவேகானந்தா கோஷ்டியினர் பலபோட்டியின் பின்னர் 32 மேலதிக ஓட்டங்களால் எதிர்க் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர். இப்போட்டி ஊரங்குணைவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

---

## உரும்பராய் பட்டின சபைத் தேர்தல் மே மாதம் நியமனங்கள்

உரும்பராய் ஞாயிறு

உரும்பராய், ஊரெழு பட்டினசபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் மே மாதம் தாக்கல் செய்யப்படவிருக்கின்றன. இதுவரை கிராமசபையாகவிருந்த இப்பகுதி பட்டின சபை அந்தஸ்துக்கு இம்முறை உயர்த்தப்பட்டுள்ளது. ஜூலைமாதம் தேர்தல் நடைபெறவிருக்கிறது.

கிராமத்தின் முதலாவது பட்டினசபைத் தேர்தல் இதுவேயாகையால், இப்போது தொடக்கமே அபேட்சகர்கள் பிரசார வேலைகளில் இறங்கி விட்டனர். ஞானவைரவர் கோவிலடி வட்டாரத்திற்கும், காட்டு வைரவர் கோவிலடி வட்டாரத்திற்கும் அபேட்சகர்களைத் தெரிவு செய்வதில் உரும்பராய் கிழக்கு முன்னேற்றச் சங்கம் ஈடுபட்டு வருகின்றது.

சுழிபுரம்

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், ஞாயிறு

வட்டுக்கோட்டை பிலவத்தை ஐக்கிய பண்டகசாலையின் 21வது வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. கா. முருகேசபிள்ளை தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:-கா. முருகேசபிள்ளை. செயலாளர்:-மு. குலரத்தினம். பொருளாளர்:-மூ. யோகநாதன். எட்டுப் பேர்கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## சுவாமி..

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

மாலை 4மணிக்கு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் வரவேற்பு. 8ந் திகதி மாலை 6 மணிக்கு வட்டுக்கோட்டை மாதர் சங்கத்தின் ஆதரவில் வரவேற்பு. 9ந் திகதிகாலை 9 மணிக்குயாழ்ப்பாணம்திவ்ய ஜீவன சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம். 9ந் திகதிமாலை3 மணிக்கு நல்லூர் மாணவர் கலா அபிவிருத்திச்சங்கத்தின் ஆதரவில் வரவேற்பு. [ந. நி.]


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
நடித்த
வடிவுக்கு வளைகாப்பு



MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
MARISA MELL
ALIPA NAUGHTON
in
FRENCH DRESSING
(Cinimascope)



REGAL - JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
Jean Marais
Mylene Demongeot
in
FANTOMAS


## பொதுமக்கள் புகார்

பூநகரி, ஞாயிறு

பூநகரிக் கிராமசபை சித்த ஆயுள்வேத இலவச வைத்தியசாலையின் கூரை சென்ற புயலின்போது மரம் விழுந்த காரணத்தினுல் சேதத்துக்கு உள்ளாகியது. இதனுல் வைத்தியசாலையில் நோயாளர் தங்குவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. இதனைத் திருத்தும்படி பொது மக்கள் கிராம சபைக்கு எழுதியிருந்தும் இன்னும் கவனிக்கப்படவில்லையெனத் தெரிய வருகிறது.

---

## எதிரி விடுதலை

சாவகச்சேரி, ஞாயிறு

சாவகச்சேரியில் யே. சோமசுந்தரம் என்பவர் கே. வீரவாகு என்பவரைக் கத்தியால் குத்த முயற்சித்ததாகவும் அதே சமயத்தில் அவரது கையில் காயம்ஏற்படுத்தியதாகவும் சாவகச்சேரிப் பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்ட வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராசா எதிரியைச் சுற்றவாளியாகக் கண்டு விடுதலை செய்தார்.

---

## இரவோடு . . .

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

அடிபடுகிறது.

களு அல்பேர்ட்டை இரண்டு, மூன்று நாட்களாக அனுராதபுரத்தில் வசிக்கும் ஒருபிரபல அரசியல்வாதி ஒளித்துவைத்திருந்ததாக ஒருசிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். இச்செய்தி பொலிசாருக்குக் கிட்டி அவர்கள் நடவடிக்கை எடுக்கு முன்னர் களு அல்பேர்ட் மறைந்து விட்டான்.

அனுராதபுரத்தில், கொழும்புக்கோஷ்டியினர் சிலருடன் காணப்பட்ட வத்தளை வர்த்தகர் ஒருவரும் பொலிசாரால் விசாரிக்கப்பட்டுள்ளார்.

இவ்வர்த்தகருக்கும் அனுராதபுர களவத்தைக்காட்டுக்கொலைகளில் சந்தேகிக்கப்படும் ஒருநபருக்கும் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

இம்மனிதரின் நடவடிக்கைளைப்பொலிசார் அவதானித்து வருகின்றனர். பொலிஸ் ரோந்து கோஷ்டியினரின் பலம், முக்கியமாக களவத்தைப்பகுதியில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இக்கொலைகள் சம்பந்தமாக சாட்சியம் அளிக்க முன் வந்தவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு யாவும் அளிக்கப்படுவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அநுராதபுர பொலிஸ்நிலையத்திற்கு வந்து சேரும் மகஜர்களில் பல முக்கியமான தகவல்கள் கிடைப்பதாக வடமேற்குப் பிரிவுப் பொலிஸ் சூப்பிரின்டெண்ட் திரு. எஸ். பி. தனபால கூறியுள்ளார்.

## நியமனம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

புதிய மேற்றிராணியாராக நியமனம் பெறவிருக்கும் வண. தியோகுப்பிள்ளை சுவாமியாரின் அபிசேகம் வைகாசி மாதம் 11-ம்திகதி திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். திருச்சடங்குகளை திருகோணமலை மேற்றிராணியார் வந். இக்னேஷீயஸ் கிளெனி ஆண்டகை நிறைவேற்றி வைப்யார்.

## பிரிவுபசார விழா

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலை புனித என்றியரசர் கல்லூரி முன்னள் அதிபர் வண. பி. தியோகுப்பிள்ளை மேற்றிராணித்துவ நியமனம் பெற்றதையிட்டு மேற்படி கல்லூரி ஆசிரியர்களால் அன்னுருக்கு பிரிவுபசார விழா நடாத்தப்பட்டது.


## வரி விளம்பரம்

### தேவை

ஆனையிறவு உப்பளத்தில் வீடுகள் கட்டுவதற்குப் பின்வரும் பொருட்கள் அவசரமாகத் தேவைப்படுகின்றன. 250 கியூப் 4''—9'' வரை கண்டகல். 12,000 முழம் 4''X2'' பனைமரம் மற்றும் விபரங்களுக்கும். விலைப்பட்டியலுக்கும்தொடர்பு கொள்க: வாக்கேர்ஸ் வேலைப்பிரதிநிதி, சிமெந்து தொழிற்சாலை, காங்கேசன் துறை அல்லது வாக்கேர்ஸ் மனேஜர் [யாழ்ப்பாணக் கிளை] ஸ்டான்லி ரேட், யாழ்ப்பாணம். 2369

### விற்பனைக்கு

வீடும் காணியும்

காங்கேசன்துறைத் துறைமுகம், புகையிரத நிலையம், நடேஸ்வரக்கல்லூரி. ஆகியவற்றிற்கு மிக அணித்தாக வீட்டுடன் கூடிய சுமார் 3 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு S. துரைராசலிங்கம், கண்டி ரேட், கிளிநொச்சி. 1677

தோட்டம்:

இளந் தென்னங்கன்றுகளைக் கொண்ட சுமார் 20 ஏக்கர்வரை பகுதியாகத் தோட்டமாக்கப்பட்ட, சுமார் 46 ஏக்கர் நிலம் பனைப் பகுதியில், கண்டி ரேட்டில் இருந்து சுமார் 400 யார் தூரத்திற்குள் புலோப்பளையில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு S. துரைராசலிங்கம், கண்டி ரேட், கிளிநொச்சி. 1678

### காணவில்லை

28-3-67 ந் திகதி [Pioneer Radio tuner] ஒரு பயனியர் றேடியோ ரியூனரும், ஒருபவ் மின்சார தையல் மெசினும் களவாடப்பட்டுவிட்டன. கண்டுபிடிப்பதற்கு தகவல் கொடுப்பவர்களுக்கு ரூ. 100/- சன்மானம் வழங்கப்படும். தகவல் விளம்பர இல: 1681, ஈழநாடு மே/பா, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்துமூலம் தெரிவிக்கவும். 1681

### கல்வி

வகுப்புகள்:

ஜி. சி. ஈ. உயர்தரம் கலை/ வர்த்தகம் விசேட பட்டதாரி ஆசிரியர்களால் வகுப்புகள் நடாத்தப்படும். விடுதி வசதிகள் உண்டு. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/ 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1674

வகுப்புகள்:

ஜி. சி. ஈ. கலை, விஞ்ஞானம், வர்த்தகம் பயிற்றப்பட்ட பட்டதாரிகள் மூலம் வகுப்புகள் நடாத்தப்படும். எங்கள் மாணவர்கள் நூற்றுக்கு நூறு வீதம் சித்தி அடைகின்றனர். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/ 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்/ பிரதான வீதி, முள்ளியவளை. 1675

ஆசிரியர்

பிற்பன் சுருக்கெழுத்து, தட்டச்சு ஆங்கிலத்திலும் மற்றும் வர்த்தகபாடங்களை க. பொ. த. சாதாரண உயர்தரப் பரீட்சை மாணவர்கட்கு தமிழிலும் போதிப்பதற்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியர் தேவை. வர்த்தக தராதரப்பத்திரம் பெற்ற இளைப்பாறியஆசிரியர் விரும்பப்படுவர். வேதனம் கோரி நற்சான்றிதழுடன் 10-4-67 க்கு முன் விண்ணப்பிக்கவும். வே. நாகநாதன், உபதலைவர், நகரசபை. பருத்தித்துறை. 1680


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேசிய சேமிப்பு பற்றி

## திருக்கோணமலையில் நிதி மந்திரி

**திருக்கோணமலை, ஞாயிறு**
**'நம்நாடு சுபிட்சம் பெறுவதற்கு பொருளாதாரத்தில் மேம்பாடடைய வேண்டும். இதற்கு அத்தியாவசியமானது தேசிய சேமிப்பு' என்று நிதிஅமைச்சர் யூ. பி. வன்னிநாயகா தெரிவித்தார்.**

திருக்கோணமலை நகராண்மைக்கழக முன்றலில்நேற்றிரவு நடைபெற்ற தேசிய சேமிப்பு இயக்க வாரவிழாவில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார். திருமலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு.சோமபால குணதிலக தலைமை வகித்தார்.

திரு.வன்னிநாயகாதொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

''இலங்கை அரசாங்கத்தின்பொருளாதாரம் குன்றியிருப்பதற்கு முக்கியமான காரணம், வெளிநாட்டுச் செலாவணி பெருக்கமுற்றிருக்காமையினால், பிறநாடுகளிலிருந்து பொருட்களைநாம் வாங்கமுனையும்போது பெருத்த கஷ்டங்கள் ஏற்படுவதேயாகும்.

வருடமொன்றுக்கு வெளிநாட்டிலிருந்து செத்தல்மிளகாய் வாங்குவதில் 450 லட்சம் ரூபாவைநம்நாடுசெலவு செய்கிறது. இதேபோன்று உருளைக்கிழங்குக்கு 350லட்சம் ரூபா செலவாகிறது.

நான் வெளிநாடு சென்றபோது. 'உங்கள்நாடு தீவு; அங்கு ஏராளமான மீன்கள் பிடிக்கலாமே!' என்று கேட்டார்கள். நான் சொன்னேன், 'எங்கள்நாடு கடலால் சூழப்பட்டதீவுதான். ஆனால் அந்தமீன்கள் பரவலாகச்சென்று வருவதால், அவைகளைப் பிடிப்பதற்கான யந்திர சாதனங்கள் தான் நம்மிடம்இல்லை.இதனால்பிறநாட்டைஎதிர்பார்க்கவேண்டியநிலைஏற்பட்டிருக்கிறது'.

**ஊர்வலம்**

திருக்கோணமலை டொக்யாட் பிரதான வாயிலிலிருந்து ஊர்வலமாகநிதிஅமைச்சர் அழைத்துச் செல்லப்பட்டார். அலங்கரிக்கப்பட்ட வாகனமொன்றில் 'டாம்பீக வாழ்வே கொண்டுவரும் தாழ்வே' என்றும் 'ஒன்றை இரண்டாக்குவதேசேமிப்பு' என்றும் சுலோகங்கள் காணப்பட்டன. திருக்கோணமலை மகா வித்தியாலய மாணவர்கள் கண்டிய நடனம் ஆடியவாறுவீதிவழியே ஊர்வலத்தில் பங்குகொண்டனர்.

அரசாங்க அதிபர் பேசியபோது குறிப்பிட்டதாவது:- எங்களைப் பொறுத்தமட்டில் எங்கள்வருவாய் தேவைக்கு அதிகமாகி சேமிப்பு வரை செல்லமுடிவதில்லை. முக்கியமாக உழவனை ஓர் எடுத்துக்கொண்டால் இன்றைய நிலைமையில் அவனுக்கு வருவாய் பற்றுக்குறையையே எட்டியுள்ளதுஇருந்துபோதிலும் நாம் ஒன்றை மறக்கக்கூடாது. புத்தபகவான் கூட நமக்குப்போதித்திருக்கிறார் நம் வருவாயில் ஒருபங்கை உணவில் செலவிடுவது போல சில பங்குகளை வியாபாரத்திலும் சேமிப்பிலும் கூட இட வேண்டுமென்று. ஆகவே நாம் நம்மாலியலுமானவரை சேகரித்தே ஆகவேண்டும்.

ஊராட்சி மன்றத்தலைவர் பேசுகையில் தாம் இந்த விழாவில் கலந்து கொண்டமையினால் பெருமை கொள்வதாக இருந்த போதிலும் இந்த நாட்டுமக்களைப் பொறுத்த மட்டில் செலவுக்குவேண்டிய வருவாயே கிடைக்காமல் இருக்கும் இந்த நிலையில் அவர்களுக்கு சேமிப்பு இயலக்கூடிய காரியமானதாவென்றும் அதற்கென்று ஒரு விழாத்தேவையானது தானா என்றும் கேட்டார்.

திருமலை எம். பி. பேசுகையில் நாளந்த வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிப்பதற்குட்பட்ட துன்பத்தே எடுத்துக்கூறி இப்போது நிலைமை படிப்படியாக சீராகிக் கொண்டு வருகிறதென்றும் இனிமேல் நிலைமை மாறி அவர்கள் யாவரும் சேமிப்பு பற்றிய நோக்கத்தைக் கொள்வார்கள் என்றும் கூறினார்.

மூதூர் தொகுதி முதலாவது எம்.பி.திரு.முகமதுஅலி பேசுகையில் ''நாட்டின் சுபீட்சத்துக்குப் பொருளாதாரம் இன்றியமையாதது. பொருளாதாரம் பெருகவேண்டுமானால் அதுநமது சேமிப்பில்தான் தங்கியுள்ளது. ஆகையால் நாம் ஒவ்வொருவரும் எப்படியும் முயற்சி செய்து ஒரு சதமாகுதல் சேமித்தே ஆகவேண்டும்'' என்றார்.

## தம்பிமரணம்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

காலமான காராளசிங்கத்தின் மரணம் சம்பந்தமாக திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினார். காலஞ்சென்றவர் சம்பவம் நடப்பதற்கு சில மணி நேரத்துக்கு முன்னதாக அவரது தாயாருடன் சண்டைபிடித்து விட்டு, காசு தரும்படியும் இல்லாவிட்டால் வீட்டுக்கு நெருப்பு வைப்பதாகவும் கூறிப்பயமுறுத்தியதோடு தாயாரைத் தாக்கியபின்னர் காசைப் பெற்றுக் கொண்டு சென்ற சில மணி நேரத்தின் பின்னர் வீட்டுக்கு முன்னால் நின்று நச்சுத்திராவகம் அருந்தயதாவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

டாக்டர் திரு. திருநாவுக்கரசு காலஞ் சென்றவரைப் பிரேத பரிசோதனை செய்த பின்னர் காலஞ்சென்றவரின் குடலுக்குள் நச்சுத்திராவகம் இருந்ததாகத் தெரிவித்தார். காலஞ்சென்றவரின் தாயாரான சின்னம்மா, அயலவரான சிவயோகமலர் ஆகியோரும் சாட்சியமளித்தபின்னர் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.[ந.நி]

## வடக்குக்கு கனிஷ்ட பல்கலைக்கழகம

உடுப்பிட்டி, திங்கள்

வடபகுதியில் கனிஷ்ட பல்கலைக்கழகமொன்று நிறுவுவது நிச்சயமாகிவிட்டது. வருகிற மே மாதம் முதல் வாரத்தில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் ஒரு பகுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் இக்கனிஷ்ட பல்கலைகழகத்தில் பத்திரிகைத் துறை, வணிகம். கலை முதலிய பல்வேறு துறைகளும் போதிக்கப்படும்.

## உற்சவம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

தீவுப்பகுதியில் உற்சவம் புங்குடுதீவு மடத்து வெளி ஸ்ரீ பாலசுப்பிரமணி தேவஸ்தான அலங்கார உற்சவம் ஆரம்பிக்கப்பட்டு பத்துத் தினங்கள்வரை நடை பெறும். விழாக்காலங்களில் நல்லூர் பஜனைக் குழுவினரின் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறவும் ஏற்பாடாகியுள்ளது.

அடுத்த ஆண்டு தொடக்கம் கொடியேற்றத் திருவிழா, ரத உற்சவம் நடைபெறுவதற்கு ஏற்ற ஆரம்ப நடவடிக்கைகளை ஆலய பரிபாலனசபை கவனித்து வருகிறது.

## இடமாற்றம்

திருக்கோணமலை, ஞாயிறு

திருக்கோணமலை மாவட்ட உயர்தர அதிகாரி திரு. பாண்டியன் திருக்கோணமலை அரசினர் வைத்திய சாலையிலிருந்து இடமாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு திருக்கோணமலையில் ஒரு பிரியாவிடை வைபவம் நடைபெற்றது. இவ்வைபவத்தில் அரசினர் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த பல வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள் உட்படப் பல பிரமுகர்கள் சமூகமளித்திருந்தனர்.

## கோணேஸ்வரரின் 9வது மகோற்சவதினம

திருக்கோணமலை, ஞாயிறு

திருக்கோணேஸ்வரப் பெருமானின் 9வது மகோற்சவ திருவிழா இன்று திருக்கோணமலை அஞ்சல் அலுவலக ஊழியர்களால் நடாத்தப் பட்டது. பெருமானுக்கு அபிஷேகம் முடிந்து உற்சவம் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மாலைதீபாராதனைக்குப் பின்னர் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் ''மங்கையர்க்கரசியார்'' பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்தினார்.

## அம்பேத்கார் உருவச் சிலை

புதுடில்லி, ஏப். 2

காலஞ்சென்ற டாக்டர் அம்பேத்காரின் உருவச் சிலையொன்றை இன்று பாரத ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் பார்லிமெண்ட் கட்டிட வளவுக்குள் திரைநீக்கம் செய்து வைத்தார்.

அப்போது டாக்டர் ராதாகிருஷ்ணன் பேசும் போது, ஜனநாயகம் நிலை பெற வேண்டுமானால் சமூக சமத்துவத்தை நாம் எல்லோரும் நம்பிக்கையுடன் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை இந்த உருவச் சிலை நினைவுறுத்திக் கொண்டு இருக்கும் என்று கூறினார்.

## இப்படி ஒரு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றுத்தலின்பேரில்தான் 'செக்' பெற்றதாகவும், பணம் எடுக்கப்படவில்லையென்றும் தெரிவித்தனர்.

இதனைத்தொடர்ந்து பட்டினசபைத்தலைவர் இரகசியப்பொலிசாரை இதுசம்பந்தமாக விசாரித்து, இந்த மோசடியில் சம்பந்தப்பட்டவர்களை கண்டுபிடிக்கும்படி இரகசியப்பொலிசாரைக் கேட்டுள்ளார், இரகசியப் பொலிசார் புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அனுராதபுர கொலை

# இரவோடு இரவாக மறைந்த பெண்

## களு அல்பேர்ட்டின் நிலை என்ன?

அனுராதபுரம், ஞாயிறு

அனுராதபுர களவத்தை காட்டுக்கொலை சம்பந்தமாகத் தேடப்படும் களு அல்பேர்ட்டின் தேடுதல் தொடர்ந்து நடைபெறுகையில், அதே மாதிரி பரபரப்பூட்டும் பெண் தேடல் ஒன்றும் நேற்று ஆரம்பமானது.

அனுராதபுரத்தில் சென்ற வருட மத்தியில் காணப்பட்டவரும், சடுதியாக அங்கிருந்து மறைந்தவருமான அழகிய இளம்பெண் செல்வி பெர்னாண்டோவைப் பொலிஸார் தேடுகிறார்கள். இப்பெண், அனுராதபுரத்தில் உள்ள ஒரு பிரபல வர்த்தகருடன் கூடித்திரிந்ததாகக் கூறப்படுகிறது. இப்பெண், கடந்த வருட முற்பகுதியில் அனுராதபுரத்தில் நடந்த 'கிளப் இரவு' கேளிக்கைகளில் பிரதான பங்கு வகித்ததாகவும் தெரிகிறது.

அந்த 'கிளப்இரவு' அன்று இப்பெண்ணுக்கு அறிமுகப் படுத்தப்பட்ட ஒருவர், அப்பெண் உயரமான சிவப்பு நிறமுடைய அழகானபெண் என்று அவரை வர்ணித்தார். அவர் மேலும் கூறியதாவது:

'அப்பெண் இலகுவில் சம்பாஷிக்கக்கூடியவர். எதையும் பற்றி அதீத அக்கறையின்றி, சர்வ சாதாரண முறையில் பேசக்கூடியவர்'' இவ்வாறு சொன்ன அந்த நபர், அப்பெண் தம்மை நடனமாடுமாறு அழைத்ததாகவும், ஆனால் அவர் அவ்வளவு திறமான நடனகாரியல்லவெனவும் அவர் மேலும் தெரிவித்தார்,

அந்த இரவுக்குப்பின், குறிப்பிடப்பட்ட இப்பெண் பற்றி ஒரு தகவலுமே கிடைக்கவில்லை. இப்பெண் சிதுவாவைச் சேர்ந்தவரென்று சொல்லப்படுகிறது. நேற்று இப்பெண் பற்றி இரகசியப் பொலிஸார், அனுராதபுர பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஒருவரின் மனைவியை விசாரணை செய்தனர்,

இதற்கிடையில், பொலிஸார் தேடித்திரிந்த களு அல்பேர்ட்டை அவர்கள் ஈற்றில் கைப்பற்றிவிட்டார்கள் என்ற செய்தி நேற்று அனுராதபுரப் பட்டினத்தில் பரபரப்பு ஏற்படுத்தியது. ஆனால், களு அல்பேர்ட்டை கைது செய்யப்பட்டதைப் பொலிஸார் மறுத்துள்ளனர்.

'இன்னும் இரண்டு மூன்று நாட்களில் ஆளைப்பிடித்து விடுவோம்' எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இப்போது ஒளிவு மறைவாகத்திரியும் களு அல்பேர்ட், பொலிசாரையும் ஏமாற்றிவிட்டு, ஒரு மாஜிஸ்திரேட் முன்னிலையில் சரணடையக்கூடுமெனவும் பேச்சு

[5-ம் பக்கம் பார்க்க]

## அருணகிரியார் விழா

நாவலப்பிட்டி, ஞாயிறு

''திருப்புகழ் தந்த அருணகிரிக்குவிழாஎடுத்தல் சாலப் பொருந்தும் செயல் திருப்புகழ் நித்திய பாராயணம் செய்யத்தக்கது. அருணகிரியார் கதிர்காமக் கந்தனின் கருணை அருள்பெற்று அவன் மகிமை உணர்ந்திருக்கின்றார்''

இவ்வாறு ஓய்வுபெற்ற சுப்ரீம் கோர்ட் நீதி அரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராஜா நாவலப்பிட்டி கஜலட்சுமி மண்டபத்தில் நடைபெற்ற அருணகிரிநாதர் விழாவுக்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். வட்டார வித்தியாதரிசி திரு. வெ. சபாநாயகம் வரவேற்புரை வழங்கினார்.

இவ்விழாவில் திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா பேசுகையில் 'இறைவன் எல்லாருக்கும் அருள் வழங்க எடுத்த இளம் சக்திதான் முருக உருவம்' என்று கூறினார்.

திருப்புகழ் தவமணி திரு. கே. வி. தியாகராஜன், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் முருகன் பெருமை பற்றியும் அருணகிரி பற்றியும் பேசினார்கள்.

## பிரச்னை தீர்ந்தது

நாவலப்பிட்டி, ஞாயிறு

பொகவந்தலாவையைச் சேர்ந்த 'கியூ' தோட்டத்தில் தொழிலாளர்களின் பிரச்னைகளைப் பற்றி தோட்டத்துரைமார் சம்மேளனப் பிரதிநிதி, இ. தொ. கா. அட்டன் மாநில தொழில் உறவு அதிகாரி திரு. எஸ். ரெங்கநாதன், பொகவந்தலாவ மாவட்டப் பிரதிநிதி திரு. பி. எஸ். சின்னையா ஆகியோர் கூடி நடாத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து பிரச்னைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

**திங்கள் 3 - 4 -67**

**செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.**

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 கதம்பஇசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதம்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 பாட்டு, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 விவேகச்சக்கரம், 7-45 தமிழ் மூலம் சிங்களம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்தி கடிதங்கள், 10-00 நேயர் விருப்பம்.

## ஆசிரியருக்கு பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையில் பல வருடங்களாக ஆங்கில உதவிஆசிரியராகக் கடமையாற்றி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு பயிற்சிபெறச் செல்லும் திரு. கா. துரைராஜசிங்கத்துக்குதலைமையாசிரியர் திரு, க. சரவணமுத்து தலைமையில் பிரிவுபசார விழா ஒன்று நடத்தப்பட்டது.

பெற்றோர்—ஆசிரியர் சங்கம், மாணவர்—ஆசிரியர் சங்கம், கிராம முன்னேற்றச் சங்கம், ஐக்கிய பண்டகசாலைச் சங்கம், கிராமச் சங்கம் ஆகியவற்றின் ஆதரவில் இந்தப் பிரிவுபசாரம் நடைபெற்றது.

ஆசிரியர் திரு. துரைராஜசிங்கத்தின் சேவையைப் பாராட்டிப்பலர் பேசினர்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ந்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org